அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 22/2019

எனது இலக்கம்: EST-3/POLIC/04/0035
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு
சுந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.08.20

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**ஒத்திவைக்கப்பட்ட தேர்தலில்/வாக்கெடுப்பில் போட்டியிடும் அரசியல் உரிமைகளைக் கொண்ட அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குதல்**

தேர்தலொன்றில்/வாக்கெடுப்பொன்றில் போட்டியிடுவதற்காக சம்பளமற்ற விடுமுறை பெற்றிருக்கும் அரசியல் உரிமைகளைக் கொண்ட அரசாங்க அலுவலர்களுக்கு அந்த தேர்தல்/ வாக்கெடுப்பு பிற்போடப்படும் சந்தர்ப்பத்தில் பின்வரும் அனுசரணைகளை வழங்க 2019.07.19 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

02. அதனடிப்படையில் தாபனவிதிக் கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உப பிரிவில் 2:3:2:1 என்ற பிரிவிற்குப் பின்னர் பின்வரும் உப பிரிவு சேர்க்கப்பட்டு திருத்தப்படுகின்றது.

2:3:2:2 தேர்தொலன்று/வாக்கெடுப்பொன்று நடாத்தப்படுவதற்கான திகதி தீர்மானிக்கப்பட்டு வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் நீதிமன்ற ஆணையொன்றின் பிரகாரம் அல்லது அவசர நிலையொன்றின் காரணமாக தேர்தல்/வாக்கெடுப்பு பிற்போடப்படும் சந்தர்ப்பத்தில்

(I) வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படுடம் இறுதித் திகதியிலிருந்து 03 மாத கால வரையறைக்கு உட்பட்டவகையில் புதிய தேர்தல்/வாக்கெடுப்புத் திகதி பிரகடனப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், தேர்தல்/வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும் திகதி வரையான காலப் பகுதி சம்பளமற்ற விடுமுறையாகக் கருதப்பட வேண்டும்.

(II) வேட்புமனு பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 03 மாத காலம் முடிவடையும் திகதியாகும் போது தேர்தல்/வாக்கெடுப்பு நடாத்தப்படும் புதிய திகதியொன்று பிரகடனப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில், அதற்கு அடுத்த நாளிலிருந்து தெரிவத்தாட்சி அலுவலரினால் தேர்தலுக்கான/ வாக்கெடுப்புக்கான புதிய திகதி வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் வெளியிடப்படுப்படும் வரையில், வேட்பாளர்கள் என்ற வகையில் சம்பளமற்ற விடுமுறை பெற்றிருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சேவைக்குச்சமுகமளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க்பபட வேண்டும். மேலும், இந்தக் காலப் பகுதியில் அலுவலக நேரத்தில் தங்களது ஊழியத்தைப் பயன்படுத்தி அரசியல் கட்சிகளின் அலுவலகங்களில் அல்லது அரசியல் பிரசாரச் செயற்பாடுகளில் ஈடமாட்டார் அந்த உத்தியோகத்தரிடமிருந்து சத்தியக் கடதாசியொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(III) நீதிமன்றத்தினால் தீர்ப்பொன்று வழங்கப்பட்டு/ அவசர நிலை சுமுக நிலைக்குத் திரும்பியவுடன் தெரிவத்தாட்சி அலுவலரினால் தேர்துலுக்கான/ வாக்கடுப்புக்கான திகதி குறிக்கப்பட்டதன் பின்னர் அந்த தேர்தல்/ வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும் திகதி வரையான காலப் பகுதி மீண்டும் சம்பளமற்ற விடுமுறைக் காலப்பகுதியாகக் கருதப்படுகிறது.

2:3:2:3 தேர்தொலன்று/ வாக்கெடுப்பொன்று நடாத்தப்படுவதற்கான திகதி தீர்மானிக்கப்பட்டு வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னர் நீதிமன்ற ஆணையொன்றின் பிரகாரம் அல்லது அவசர நிலையொன்றின் காரணமாக தேர்தல்/வாக்கெடுப்பு பிற்போடப்படும் சந்தர்ப்பத்தில்.

(I) தேர்தல்/வாக்கெடுப்பு பிற்போடப்படும் அறிவித்தல் வெளியிடப்படும் திகதியில் சம்பளமற்ற விடுமுறை அனுமதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள், அத்தினத்திற்கு அடுத்த நாள் முதல் தாங்கள் இறுதியாகப் பணிபுரிந்த சேவை நிலையத்திற்குச் சமுகமளித்தல் வேண்டும்.

(II) மீண்டும் தேர்தல்/வாக்கெடுப்பு நடைபெறும் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் தாபனவிதிக் கோவையின் முதலாம் தொகுதியின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் படி செயற்படுதல் வேண்டும்.

2:3:2:4 தேர்தலொன்றுக்காக/ வாக்கெடுப்பொன்றுக்காக வேட்புமனு நிராகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அவ்வாறு நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்படும் திகதியில் சம்பளமற்ற விடுமுறை அனுமதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள், அத்தினத்திற்கு அடுத்த நாள் முதல் தாங்கள் இறுதியாகப் பணிபுரிந்த சேவை நிலையத்திற்குச் சமுகமளித்தல் வேண்டும்.

2:3:2:5 தேர்தொலொன்று/வாக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டு விசேட காரணங்களின் அடிப்படையில், அந்த தேர்தல்/ வாக்கெடுப்பு இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அவ்வாறு இரத்துச் செய்வதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மீண்டும் தேர்தல்/ வாக்கெடுப்பு நடாத்தப்படும் திகதி அறிவிக்கப்படும் திகதி வரையான காலம் 3 மாதங்களுக்கு மேற்பட்டதாக இருப்பின், தேர்தலுக்காக/ வாக்கெடுப்புக்காக சம்பளமற்ற விடுமுறை பெற்றிருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு, அந்த 03 மாதங்களை விஞ்சும் திகதியிலிருந்து தேர்தல்/ வாக்கெடுப்பு மீண்டும் நடைபெறும் திகதி அறிவிக்கப்படும் திகதி வரையான காலத்தினுள் சேவைக்குச் சமுகமளிப்பதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.

2:3:2:6 மேலே 2:3:2:2 முதல் 2:3:2:5 வரையான உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளமற்ற விடுமுறைக் காலப் பகுதிகளுக்காக அலுவலர்களுக்கு உரித்தான சாதாரண விடுமுறை நாட்கள் இருக்குமாயின், அவற்றைப் பெறுவதற்கு இடமளிக்க முடியும்.

03. இந்த ஏற்பாடுகள் 2019.07.19 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு